# மயிலாடுதுறை நகராட்சி

**2019–ம் ஆண்டு மார்ச் மாதம் 06 –ஆம் தேதி புதன்கிழமை**
**மாலை 3.30 மணிக்கு நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகள்.**
**முன்னிலை:– திரு. பி.கிருஷ்ணமூர்த்தி, எம்.ஏ.,எம்.ஃபில்.,**
**தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர்**
**மயிலாடுதுறை நகராட்சி**

**மயிலாடுதுறை**
**நாள்: 04.03.2019**

**தனி அலுவலர் / ஆணையர்**
**மயிலாடுதுறை நகராட்சி**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| **06.03.2019** | **1)** இந்நகராட்சியில் 2007–2008–ம் ஆண்டு முதல் 2011–2012–ம் ஆண்டு வரை குத்தகை இனங்கள் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான அசையா சொத்துக்களிலிருந்து வரக்கூடிய வருவாயில் இருந்து சேவை வரித்தொகை செலுத்த மத்திய கலால்துறையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளதன் பொருட்டு மொத்த சேவைவரி கேட்புத்தொகை ரூ.39,87,833/–ல் நிலுவைத்தொகை ரூ.27,00,000/– மற்றும் நடப்புத்தொகை ரூ.1,54,690/–ம் செலுத்தப்பட்டுள்ள நிலையில் அபராத தொகையாக ரூ.35,36,232/–ம் செலுத்த மத்திய கலால்துறை உதவி ஆணையர், கடலூர் அவர்களின் கடிதம் ஓ.சி.எண்.10/2016. நாள்.18.01.2016–ல் உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி அபராத தொகையினை செலுத்துவதில் இருந்து விதிவிலக்கு பெற வேண்டியும், சேவைவரிக்கட்டணம் செலுத்துவதில் இருந்து சதவிகித தொகையினை குறைக்கும் பட்சமும் இவ்விரண்டிற்குமாக சென்னை உயர்நீதிமன்றத்தில் நகராட்சி சார்பாக வழக்கு தொடர வேண்டியதால், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.ஜி.முருகப்பன், அவர்கள் மூலமாக வழக்கினை தொடரவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.50000/–(ஐம்பதாயிரம் மட்டும்)–த்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.3645/2012/அ1. | **தீர்மான எண்:513**<br><br>அனுமதிக்கப்பட்டது |

**தீர்மான எண்:514**

அனுமதிக்கப்பட்டது

**2)** மயிலாடுதுறை நகராட்சி நகரமைப்பு பிரிவிற்குண்டான கட்டிட அனுமதி உரிமையாணை கட்டணங்கள் மற்றும் நகரமைப்பு பிரிவு மூலம் வசூலிக்கப்படும் கட்டிட அனுமதி தொடர்பான கட்டணங்கள் யாவும் **19/06/2017–ல்** நிறைவேற்றப்பட்ட மன்ற தீர்மான எண்.**143–ன்படி** திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **1920** பிரிவு **321–ன்படி 01.10.2017–ந்தேதி** முதல் நகரமைப்பு பிரிவு மூலம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் அரசாணை எண்.**18** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். **04.02.2019** அரசாணையின்படி வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் **2019–ன்படி** விதி–**14–ல்** கட்டிட அனுமதி காலம் **5** ஆண்டுகள் மற்றும் ஒருமுறை காலநீட்டிப்பு காலம் **3** ஆண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால் கட்டிட அனுமதி காலத்தை **5** ஆண்டுகளுக்கு அனுமதி வழங்குவதற்கேற்பவும், விதிகளின்படி கட்டிட விகிதங்களை உயர்த்தி கீழ்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு வசூல் செய்திடவும், மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்திடவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

# அட்டவணை

**(அரசாணை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து அமுல் படுத்திட வேண்டிய திருத்திய கட்டணம்)**

| வ. எண். | தமிழ்நாடு நகராட்சி சட்டத்தின் பிரிவு | கட்டணம் விதிக்கப்படும் தொழில் அல்லது செயல் | அளவு | காலம் | தற்போதுள்ள கட்டண விகிதம் ரூ மூன்று ஆண்டுகளுக்கு | ஐந்து ஆண்டுகளுக்கு திருத்திய கட்டண விகிதம் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| | | குடியிருப்பு | | | | |
| 1 | 197 | **1.** செல்லார் மற்றும் செமி பேஸ்மென்ட், | ஒவ்வொரு பத்து சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டுகளுக்கு | **350** | 410 |
| | | **2.** தரைதளம் | ஒவ்வொரு பத்து சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டுகளுக்கு | 400 | 460 |
| | | **3.** முதல்தளம் | ஒவ்வொரு பத்து சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டுகளுக்கு | 450 | 520 |
| | | **4.** இரண்டாம்தளம் | ஒவ்வொரு பத்து சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டுகளுக்கு | 500 | 580 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 5. மூன்றாம்தளம் அதற்கு மேல் உள்ள தளங்கள் | ஒவ்வொரு பத்து சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டுகளுக்கு | 600 | 690 | |
| | 2 | 197 | 4. ஓட்டுக்கட்டிடம் (TILED) சிமெண்ட் தகடுகள், ஏ.சி.சீட் மற்றும் பைபர், தகரம் புதிதாக கட்டுதல்,மாற்றம் செய்து காட்டுதல் அனுமதிக்க | ஒவ்வொரு பத்து சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டுகளுக்கு | 300 | 350 | |
| | | 198 | கட்டிடங்கள் கட்ட மனையை அங்கீகரிக்க | | | | | |
| | 3 | | 1. மனை ஒன்றுக்கு மனையின் பரப்பு 250 சதுர மீட்டர் வரை | | ஐந்து ஆண்டுகளுக்கு | 250 | 290 | |
| | | | 2. மனை ஒன்றுக்கு மனையின் பரப்பு 250 சதுர மீட்டருக்கு மேல் | | ஐந்து ஆண்டுகளுக்கு | 300 | 350 | |
| | 4 | 197 | 1. கூடுதல் கழிவறை | ஒன்றுக்கு | ஐந்து ஆண்டுகளுக்கு | 100 | 120 | |
| | | | 2. குளியல் அறை | ஒன்றுக்கு | ஐந்து ஆண்டுகளுக்கு | 100 | 120 | |
| | | | அ. கழிவறையுடன் கூடிய குளியல் அறை மற்றும் டாய்லெட் அறை | ஒன்றுக்கு | ஐந்து ஆண்டுகளுக்கு | 200 | 230 | |
| | | | அ. மேல்நிலைத்தொட்டி ஆ.நச்சித்தொட்டி | ஒன்றுக்கு | ஐந்து ஆண்டுகளுக்கு | 200 | 230 | |
| | | | 3. சுற்றுச்சுவர் சாலையை ஒட்டி 1.50 மீட்டருக்கு மேற்படாமலும் மற்றும் பக்கங்கள் 2.40மீட்டர் உயரத்திற்கு மேற்படாமலும் | ஒவ்வொரு பத்து சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டுகளுக்கு | 25 | 30 | |

| | | |
|---|---|---|
| | மேற்கண்டவாறு கட்டணங்களை மாற்றியமைத்து நடைமுறைபடுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**அலுவலகக்குறிப்பு:** 1. அட்டவணையில் கண்டவாறு நகரமைப்பு பிரிவு கட்டணங்களை மாற்றியமைத்து நடைமுறைபடுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>2. மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்து பட்டியலில் கண்டுள்ளவாறு புதிய கட்டணத்தை நடைமுறைப்படுத்தலாம்.<br>**ந.க.எண்.3388/2017/எப்1.** | |

| | | |
|---|---|---|
| | **3)** அரசாணை எண்18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்.04.02.2019–ன்படி வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன்கீழ் விதி 14–ல் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்கும் உரிம காலம் நடப்பில் 3 ஆண்டு காலமாக இருந்தது 5 ஆண்டு காலமாக காலநீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் கட்டிட அனுமதி உரிம காலத்தை உரிம காலம் முடிந்தப்பின் 3 ஆண்டுகள் உரிமம் புதுப்பித்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ள 3 ஆண்டுகால உரிம கட்டணம் உள்ளிட்ட கட்டிட அனுமதி தொடர்பான கட்டணங்களை 15 சதவீதம் உயர்த்தி 5 ஆண்டுகளுக்கு நிர்ணயம் செய்து வசூல் செய்யவும், மேலும் ஒருமுறை 3 ஆண்டுகாலம் உரிம காலத்தை நீட்டிப்பு செய்ய உரிம கட்டணம் வசூலிக்கும் தொகையை மீள செலுத்தும் வகையிலும் அதற்கேற்ப நகரமைப்பு பிரிவு தொடர்பான கட்டணங்களை உயர்த்தி நிர்ணயம் செய்து மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும், நடவடிக்கை மேற்கொள்ளவும், ஆகும் உத்தேச செலவினம் ரூ.50000/– (ஐம்பதாயிரம் மட்டும்) –த்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன்கீழ் விதி 14–ல் குறிப்பிட்டுள்ளவாறு நகரமைப்பு பிரிவு கட்டிட அனுமதி தொடர்பான கட்டணங்களை 3 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டு காலத்திற்கு உயர்த்தவும், விலைப்பட்டியல் உள்ள கட்டணத்திலிருந்து 15 சதவீதம் உயர்த்தி நிர்ணயம் செய்யவும், மேலும் 3 ஆண்டு காலத்திற்கு காலநீட்டிப்பு செய்து கொள்ளவும், மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்து நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**ந.க.எண்.4538/2018/எப்1.** | **தீர்மான எண்:515**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **4)** அரசாணை எண்18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்.04.02.2019–ன்படி வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன்கீழ் விதி 7(2)–ல் குறிப்பிட்டுள்ளவாறு நடைமுறையில் உள்ள அதிகார பகிர்வுக்கு உட்பட்டு கட்டிட மற்றும் திட்ட அனுமதிக்கான கூராய்வு கட்டணம் கீழே உள்ள விவரப்படி உள்ளாட்சிகளால் வசூலிக்கப்பட்டு உரிய தலைப்பில் செலுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>i a). விண்ணப்பதாரர் கட்டிடம் கட்ட திட்ட அனுமதிக்கு, ஒரு சதுரமீட்டருக்கு ரூ.2/–<br>b) முதல் திருத்திய வரைபடம் தளபரப்பு ஒரு சதுரமீட்டருக்கு ரூ.1/–<br>c) 2-வது திருத்திய வரைபடம் தளபரப்பு ஒரு சதுரமீட்டருக்கு ரூ.0.40/–<br>d) 3- வது திருத்திய வரைபடம் தளபரப்பு ஒரு சதுரமீட்டருக்கு ரூ.0.20/–<br>e) மற்ற திருத்திய வரைபடத்திற்கு கட்டணம் ஏதும் இல்லை.<br>ii. மனைப்பிரிவு / மனை உட்பிரிவு மற்றும் மனைகளை ஒன்றாக்குதல் நிலப்பரப்பு ஒரு ச.மீ–க்கு ரூ.0.75/<br>iii. நிலமாற்றம் (lump sum) ரூ. 20000/–<br><br>மேற்படி கூராய்வு கட்டணத்தை கட்டிடம் மற்றும் திட்ட அனுமதி வழங்கும்போது இந்நகராட்சியில் வசூல் செய்திட, மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிடவிதிகள் 2019 விதி 7(2)–ன்கீழ் மேற்படி பட்டியலில் கண்டுள்ளவாறு திட்ட அனுமதிக்கு கூராய்வு கட்டணம் நகராட்சி வசூல் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**ந.க.எண்.4538/2018/எப்1.** | **தீர்மான எண்:516**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **5)** தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன்கீழ் விதி 30(1)–2–ல் குறிப்பிட்டுள்ள தொடர் கட்டுமானப்பகுதி (Continues Building Area) மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதி (Economically weaker section) சர்வே எண் மற்றும் தேவையான விபரங்கள் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் சென்னை அவர்கள் ஒப்புதலுக்கு அனுப்ப நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை–28 அவர்களின் சுற்றறிக்கை கடித ந.க.எண். 31159/2018/டிபி3. நாள். 05.03.2019–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தொடர் கட்டுமான பகுதி, மற்றும் பொருளாதாத்தில் நலிவடைந்தோர் பகுதியிலும் கணக்கீடு செய்யப்பட்டது. சர்வே எண்கள் உள்ளிட்ட பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. மேற்படி பட்டியலை உரிய ஒப்புதலுக்கு நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>1. தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன்கீழ் விதி 30(1)–2–ல் குறிப்பிட்டுள்ள தொடர் கட்டுமானப்பகுதி (Continues Building Area) மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதி (Ecnomically weather section) சர்வே எண் மற்றும் தேவையான விபரங்கள் அடங்கிய பட்டியலுக்கு ஒப்புதல் வழங்கலாம்.<br>2. மேற்படி பட்டியலை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் சென்னை அவர்களுக்கு ஒப்புதலுக்கு அனுப்பிட மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**ந.க.எண்.4538/2018/எப்1.** | **தீர்மான எண்:517**<br>அனுமதிக்கப்பட்டது |
| | **6)** மயிலாடுதுறை நகராட்சி வருகின்ற பாராளுமன்ற தேர்தல் 2019–ஐ முன்னிட்டு நகராட்சியின் வாக்குச்சாவடி மையங்களுக்கு தேவையான பராமரிப்பு பணிகளான சாய்தளம் அமைத்தல், குடிநீர் வசதி செய்தல், கழிவறை வசதி செய்தல், ஜெனரேட்டர் வசதி செய்தல், பழுதடைந்த ஜன்னல், கதவுகள் சீர்செய்தல் போன்ற பணிகளை செய்திட வேண்டி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஓய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே வாக்கு சாவடிகளில் தேவைப்படும் பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.2.50 லட்சம் (ரூபாய் இரண்ட லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) இதனை நகராட்சியின் வருவாய் நிதி 2018–2019–லிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.0952/2019/இ1. | **தீர்மான எண்:518**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **7)** **2018–2019–ம்** ஆண்டிற்கு சொத்துவரி சீராய்வு வரி உயர்வு செய்யப்பட்டதற்கு சொத்துவரி சிறப்பு அறிவிப்புகள் பிரிண்டிங் எடுத்து கொடுக்கும் பணியினை மேற்கொள்ள உள்ளூர் அச்சகத்தில் இருந்து **28.02.2019** அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ள விபரப்படி 3 விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு,<br><br>**வ.எண்.** \| **அச்சகத்தின் பெயர்** \| **ஒரு பிரதிக்கான விலை விகிதம் ரூ.**<br>1 \| நாதன் லேசர் பிரிண்டர், மயிலாடுதுறை \| 2.00/–<br>2 \| ஜெமினி பிரஸ், மயிலாடுதுறை \| 2.60/–<br>3 \| கலைஞர் அச்சகம், மயிலாடுதுறை \| 2.50/–<br><br>மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் நாதன் லேசர் பிரிண்டர், மயிலாடுதுறை குறைந்த விலைப்புள்ளி ரூ.2.00/–க்கு கொடுத்துள்ளதை ஏற்கவும் அவசரம் அவசியம் கருதி மேற்படி வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.3410/2018/அ1 | **தீர்மான எண்:519**<br><br>அனுமதிக்கப்பட்டது |
| | **8)** மயிலாடுதுறை நகராட்சியின் **2019–2020–ம்** ஆண்டிற்கான வரவு செலவு அறிக்கையினை (General Budget) கணினியில் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யவும், பதிவேற்றம் செய்யப்பட்ட பின்பு அறிக்கை தயார் செய்யவும், அதற்கான மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.544/2019/பி1. | **தீர்மான எண்:520**<br><br>அனுமதிக்கப்பட்டது |

**9)**மயிலாடுதுறை நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் உள்ள ஆழ்துளை கிணறு பழுதடைந்து இயங்காமல் உள்ள மினிபவர் பம்புகளின் விவரம்,

| வ.எண் | வார்டு எண் | தெருவின் பெயர் | மின் இணைப்பு எண் |
|---|---|---|---|
| 1 | 1 | ஆழ்வார்குளம் கிழக்கு | 522-024-1391 |
| 2 | 2 | பெருமாள் கோயில் சன்னதி | 522-022-1810 |
| 3 | 2 | பெருமாள் கோயில் கீழவிதி | 522-022-1630 |
| 4 | 5 | சேந்தங்குடி அக்ரஹாரம் | 522-022-1429 |
| 5 | 6 | துர்கையம்மன் கோயில் தெரு | 524-058-1476 |
| 6 | 7 | தருமபுரம் சாலை, ஆலமரத்தடி | 522-020-1764 |
| 7 | 8 | திரு.வி.க. மார்கெட் வாசல் | 522-001-1733 |
| 8 | 9 | விஜயாதியேட்டர் அருகில் | 521-016-1205 |
| 9 | 12 | எடத்தெரு சந்து | 521-008-1533 |
| 10 | 13 | வடக்கு சாலியத் தெரு | 521-010-2249 |
| 11 | 14 | ஹாஜியார் நகர், UGD near | 521-010-2625 |
| 12 | 16 | வேதம்பிள்ளை காலனி | 521-009-1133 |
| 13 | 17 | பனங்காட்டுத் தெரு, இந்திரா காலனி | 529-051-2185 |
| 14 | 17 | ஐஸ்பேக்டரி சந்து | 529-051-3073 |

**தீர்மான எண்:521**

அனுமதிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| 15 | 18 | சித்தர்காடு பாரதி நகர் - TPS | 529-051-2196 |
| 16 | 26 | பெரிய பள்ளி வாசல் எதிர் | 521-017-1423 |
| 17 | 27 | புதிய பேருந்து நிலையம் | 521-004-1618 |
| 18 | 29 | ஸ்ரீநகர் காலனி மேற்கு கடைசி | 522-018-1254 |
| 19 | 29 | வெள்ளாந்தெரு | 522-018-1067 |
| 20 | 30 | அய்யாரப்பர் மேலவீதி, PSA near | 522-018-1337 |
| 21 | 32 | நம்பர்.5 புதுத்தெரு | 522-021-809 |
| 22 | 34 | பொட்டவெளித் தெரு | 522-023-1377 |
| 23 | 35 | நம்பர்.3 புதுத்தெரு | 522-021-1044 |
| 24 | 36 | வேடர் காலனி | 522-020-1345 |
| 25 | 36 | வேடர் காலனி J/N | 522-020-1475 |

மேற்காணும் இடங்களில் உள்ள சிறுமின்விசை பம்புகள் முற்றிலும் பயன்பாடு அற்ற நிலையில் உள்ளதாலும், இதனை பராமரிப்பு செய்திட இயலாத நிலையில் சிதலமடைந்து உள்ளதால் இவற்றிற்கு வரும் மின்சாரத்தினை நிரந்தரமாக மின்சார வாரியத்தின் மூலம் துண்டிப்பு செய்திட வேண்டி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1143/2019/இ1

| | | |
|---|---|---|
| | **10)** மயிலாடுதுறை நகராட்சி முடிகண்டநல்லூர் தலைமை குடிநீரேற்று நிலையத்தில் அவ்வப்போது ஏற்படும் மின்சார பழுதுகளை சீர்செய்திடும் வகையில் மின் உதிரி பாகங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்கிட தேவையான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4,80,000/– (ரூபாய் நான்கு இலட்சத்து என்பதாயிரம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதி 2018–2019 –லிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மான எண்:522**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.1142/2019/இ1. | |
| | **11)** தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன்கீழ் விதி 23–ன்படி, நகரமைப்பு பிரிவு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி தொடர்பாக, 1. பதிவு பெற்ற கட்டிட வரைவாளர், 2. பொறியாளர், 3. கட்டமைப்பு பொறியாளர், 4. கட்டிட அபிவிருத்தியாளர், 5.தரதணிக்கையாளர், 6. நகரமைப்பு வல்லுநர், 7. அபிவிருத்தியாளர், முதலான தொழிற்சார்ந்த வல்லுநர் நகராட்சியில் 01.04.2019 முதல் நகராட்சி நிர்வக ஆணையர் அவர்களால் உருவாக்கப்பட்டுள்ள Screening committee சான்று பெற்ற நபர்களை பதிவு செய்ய வேண்டும் என்றும் Screening committee –யில் ஆணையர், நகரமைப்பு அலுவலர், நகரமைப்பு ஆய்வாளர், ஆகியோர் கொண்டு அமைக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை–28 அவர்களின் சுற்றறிக்கை கடித ந.க.எண்.50977/2018/டிபி3–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்பேரில் ரூ.5000/– பதிவு கட்டணமாக தொழில் சார்ந்த வல்லுநர்களிடம் பெற்றுக்கொள்ளவும், மேலும் ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மாதத்தில் மன்றத்தின் பார்வைக்கு உரிமம் புதுபித்து பதிவிற்கு வைக்கவும், கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொழில் சார்ந்த வல்லுநரிடம் பெற்று ரூ.5000/– பதிவு கட்டணமாக வசூலிக்கவும், நியமனம் செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br>1. தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன்கீழ் விதி 23–ன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை–28 அவர்களின் சுற்றறிக்கை கடித ந.க.எண்.50977/2018/டிபி3–ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு 1.பதிவு பெற்ற கட்டிட வரைவாளர், 2.பொறியாளர்,3.கட்டமைப்புபொறியாளர், 4.கட்டிடஅபிவிருத்தியாளர்,5. தரதணிக்கையாளர், 6. நகரமைப்பு வல்லுனர், 7.அபிவிருத்தியாளர், ஆகியோர் Screening committee குழு பரிந்துரையின் அடிப்படையிலும் Screening committee சான்று பெற்றும் ரூ.5000/– பதிவு கட்டணமாக தொழில் சார்ந்த வல்லுநர்களிடம் வசூலிக்கவும், நியமனம் செய்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**ந.க.எண்.4538/2018/எப்1.** | **தீர்மான எண்:523**<br><br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **12)** 2019–ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தல்–2019 தொடர்பாக, தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலுக்கு வரும் பட்சத்தில் பொது இடங்கள் தோற்றங்கள் சீர்குலைத்தல் சட்டம் 1959–ன்கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுவர்களில் அரசியல் கட்சி தொடர்புடைய சுவர் விளம்பரங்கள், போஸ்டர்கள், பேனர்கள், ப்ளக்ஸ் போர்டுகள் முதலியவற்றை சுண்ணாம்பு, பெயிண்ட் கொண்டு அழிக்கவும், அதனை ஆவணபடுத்திட புகைப்படங்கள் எடுத்து வழக்கு தொடர்ந்திடவும், இப்பணிகளுக்கு சுண்ணாம்பு, ஃபெவிக்கால், பெயின்ட்ங் பிரஸ், போட்டோ பிரிண்ட் எடுக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.50000/– த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி, பாராளுமன்ற தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலுக்கு வரும் பட்சத்தில் தோற்றங்கள் சீர்குலைத்தல் சட்டம் 1959–ன்கீழ் நகராட்சி அலுவலகம் மூலம் நடவடிக்கை எடுத்திட ரூ.50000/– த்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**ந.க.எண்.5719/2017எப்1** | **தீர்மான எண்:524**<br><br>அனுமதிக்கப்பட்டது |
| | **13)** தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, சென்னை 106 அவர்களின் கடித ந.க.எண்.4111/2018/தே.பொ1. நாள்.28.02.2019–ல் தெரிவித்துள்ளபடி இந்நகராட்சியில் மறுவரையறை செய்யப்பட்ட புதிய வார்டுகளுக்கான வாக்குச்சவாடி பட்டியல் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல் தொடர்பான பணிகளுக்கு கால அட்டவணையின் பேரில் வாக்குச்சவாடி பட்டியல் தயார் செய்து மாவட்ட ஆட்சியர் நாகப்பட்டினம் அவர்களுக்கு அனுப்பவும், அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து ஆலோசித்து மாவட்ட தேர்தல் ஆணையர் கூட்டத்தை நடத்திடவும், மேற்படி கூட்டத்தில் ஆட்சேபணை ஏதும் இருப்பின் அதனடிப்படையில் திருத்தங்கள் செய்து வாக்குச்சாவடி பட்டியல் வெளியிடவும் மற்றும் விளம்பர படுத்தவும் மேலும் நிறைவு செய்யப்பட்ட வாக்குச்சாவடி பட்டியலை அச்சிட்டு முடிக்கவும் மற்றும் விநியோகிக்கவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** வாக்குச்சாவடி பட்டியல் பார்வைக்கும், பதிவிற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**ந.க.எண்.5719/2017எப்1** | **தீர்மான எண்:525**<br><br>அனுமதிக்கப்பட்டது |
| | **14)** இந்நகராட்சியில் 2017–2018–ம் ஆண்டிற்கான தணிக்கை நடைபெற்றதில், ஆண்டுக்கணக்குகள் இணையதளம் மூலம் பதிவு செய்து கணக்குகளை முடிக்க தணிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதன் பொருட்டு அதன் அடிப்படையில் 2017–2018–ம் ஆண்டுக்குரிய கணக்குகள் தணிக்கை முடிவினை கருத்தில் கொண்டு அவசர அவசியத்தினை கருதி ஸ்ரீ கிருஷ்ணா அசோசியேட்ஸ் மயிலாடுதுறை நிறுவனத்திடம் கணக்கு பணிகளை ஒப்படைத்து இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்து கணக்குகள் முடிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணியினை அவசர அவசியம் கருதி செய்யப்பட்டதால், மேற்கண்ட நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழங்க செலவினத்தொகை ரூ.30,000/–க்கும், அவசர அவசியம் கருதி இப்பணியினை மேற்கொள்ளப்பட்டதால், பட்டியல் தொகை<br>வழங்கப்பட்டதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண் 4847/2019/பி1 | **தீர்மான எண்:526**<br><br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **15)** இந்நகராட்சியில் துறை மூலம் வசூல் செய்யும் பஸ் கட்டணத்திற்குரிய ரசீது புத்தகங்கள் இருப்பில் இல்லாததால், துறைமூலம் பஸ் கட்டண வசூலினை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி உள்ளூர் அச்சகத்தில் விலைப்புள்ளி கோரி பஸ் கட்டணம் ரசீதுகள் அச்சடித்துக் கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 75000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண் அ2/1047/2019 | **தீர்மான எண்:527**<br>அனுமதிக்கப்பட்டது |
| | **16)** மயிலாடுதுறை நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் தூய்மை இந்தியா இயக்கம், நகராட்சி எல்லைக்குள் உள்ள அரசு பள்ளி மற்றும் நகராட்சி பள்ளிகள், ஆகமொத்தம் 17 பள்ளிகளுக்கு அரசாணை எண்.166/26.11.2016/ன்படி பள்ளி கழிவறை தூய்மை பணி மற்றும் வளாகங்கள் சுத்தம் செய்யும் பணிக்காக தனியார் நிறுவனம் Saram Enviro Service Pvt Ltd.,Chennai. என்ற நிறுவனத்தின் மூலம் 2018–2019–ம் கல்வி ஆண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்பட்டது. மேற்படி பணியின் ஒப்பந்தகாலம் மார்ச் 2019ம் ஆண்டோடு முடிவடைவதால் 2019–2020–ஆம் கல்வியாண்டிற்கு Saram Enviro Service Pvt Ltd., Chennai என்ற நிறுவனம் ஒப்பந்தத்தை புதுபித்து கோரியுள்ளதை அடுத்து ஒப்பந்த காலநீட்டிப்பு செய்து பள்ளி கழிவறைகள் மற்றும் வளாகத்தின் தூய்மை பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும், ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் மாவட்ட ஆட்சியரின் தினக்கூலி ஊதிய அடிப்படையில் ரூ.270/– வீதம் ESI ,PF மற்றும் கிருமிநாசினி பொருட்கள் உட்படி ஒரு நபருக்கு தினக்கூலி ரூ.347.36/– வீதத்திற்கு ஓராண்டிற்கு கால நீட்டிப்பு செய்து வழங்கிட உத்தேச செலவினத்தொகை ரூ.2000000/– (இருபது லட்சம்)–ற்கு நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.171/2017எச்1 | **தீர்மான எண்:528**<br>அனுமதிக்கப்பட்டது |
| | **17)** தமிழ்நாடு சட்டமன்றம் பேரவை விதி எண்.110–ன்கீழ் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.02.2109 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி வறுமைக்கோட்டிற்குகீழ் வாழும் கிராமப்புற மற்றும் நகர்புற ஏழைகளுக்கு குறிப்பாக விவசாய தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு தொழிலில் ஈடுப்பட்டுள்ள ஏழைக் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ஒரு முறை சிறப்பு நலநிதி உதவி ரூ.2000/– வழங்கிட அரசு ஆணை (நிலை) எண்.20, ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி (மஅதி3) துறை, நாள்:13.02.2019 ஆணை வெளியிடப்பட்டதின்படி இந்நகராட்சி பகுதிகளில் வாழும் ஏழை தொழிலாளர்களை கணக்கெடுக்கும் பணிக்கு, கணக்கெடுப்பிற்கு தேவையாள படிவங்களை அச்சிட்டமைக்கும், இந்நகராட்சியில் உள்ள 36 வார்டுகளுக்கும் தனித்தனியாக பணியாளர்கள் அமைத்து கணக்கெடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டதற்கும், கணக்கெடுப்பு செய்யப்பட்ட படிவங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டமைக்குமான உத்தேச செலலீவனம் ரூ.300000/– (மூன்று இலட்சம் மட்டும்) ஆகும் | **தீர்மான எண்:529**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும், இதற்கு அரசு வழங்கும் நிதி கிடைக்கப்பெற்றவுடன் அதனை இந்நகராட்சி வருவாய் நிதியில் ஈடுசெய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு 1. அனுமதிக்கலாம்.<br><br>2. மேற்படி பணியில் அரசு உரிய கால அவகாசம் வழங்காமல் உடனடியாக கணக்கெடுப்பு பணி மேற்கொள்ள உத்திரவிட்டதன்படி இதற்கு தேவையான விண்ணப்பங்கள் மற்றும் ஒப்புகை சீட்டுகளை உள்ளுர் அச்சகமான ‘‘நாதன் பிரஸ்’’ மயிலாடுதுறை அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கி விண்ணப்பங்கள் மற்றும் ஒப்புகைச் சீட்டுக்கள் அச்சிடப்பட்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.587/2019/சி1** | |
| | **18)** மயிலாடுதறை நகராட்சி பொறியியல் பெரிவு பராமரிப்பில் உள்ள ஈப்பு வாகன எண்.51T7645–ல் ஈப்பு வாகனத்தின் அவசியம் கருதி பழுதுகளை உடன் நீக்கம் செய்யப்பட்ட செலவீனத் தொகை ரூ.3145/– (மூவாயிரத்து நூற்று நாற்பத்து ஐந்து மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>1. அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவீனத்தை மேற்கொள்ள வாகன ஓட்டுநர் திரு. K.கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு காசோலையாக வழங்குவதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 457/2019/இ1.** | **தீர்மான எண்:530**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **19)** மயிலாடுதுறை நகராட்சி பொது சுகாதார பிரிவு பராமரிப்பில் உள்ள ஈப்பு வாகனம் எண்.TN51U6995–ற்கு மின்கலப்பெட்டி பழுதடைந்து விட்டதால் மேற்கண்ட வாகனத்தை இயக்குவதற்கு சிரமநிலை ஏற்படுகிறது. எனவே புதிய மின்கலப்பெட்டி வாங்கி பொருத்திடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.8500/– (எட்டாயிரத்து ஐநூறு மட்டும்)–ற்கு நிர்வாக அனுமதியும் மற்றும் மன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.129/2019/எச்1. | **தீர்மான எண்:531**<br>அனுமதிக்கப்பட்டது |
| | **20)** நாடாளுமன்ற தேர்தல்–2019–ந்தேதி அறிவிக்கப்பட உள்ளதால் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தெருவோரம் மற்றும் பாதையோரங்களில் வியாபாரம் செய்பவர்களிடம் பிரிவு 270–ன்கீழ் வசூல் செய்யும் உரிமம் ஏலம் விடப்ப தேர்தல் வரையறை விதிமுறைகளின்படி இடம் இல்லை என்ற காரணத்தினால், நகராட்சிக்கு வருவாய் நிதியிழப்பு ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டு துறை மூலம் வசூல் செய்ய மன்றத்தின் அனுமதியும், ரசீது புத்தகங்கள் அச்சடித்து பெறப்படுவதற்கான உத்தேச செலவினத்திற்கு ரூ. 50000/–த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.5378/2016/அ2. | **தீர்மான எண்:532**<br>அனுமதிக்கப்பட்டது |
| | **21)** மயிலாடுதுறை நகராட்சி பொது சுகாதாரம் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டு நெறிமுறைகள் R.o.c.No. 2571/2017/J1. நாள் 28.11.2017–ன்படியும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் வழங்கப்பட்ட கருத்துருவின்படி நகரில் 36 வார்டுகளிலும் கோடைகாலத்தில் பரவும் டெங்கு மற்றும் வைரஸ் காய்ச்சல் பரவுவதை தடுக்க, டெங்கு தடுப்புபணி பார்க்க தேவையான டெங்கு மஸ்தூர்கள்(DBC) 15 பணியாளர்கள் மகளிர் சுய உதவிக்குழு மூலம் 2019–ஏப்ரல்–மே–ஜுன் ஆகிய மூன்று மாதங்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் நபர் 1–க்கு, நாள்–1–க்கு ரூ.300/– வீதம் ஊதியம் வழங்க உத்தேச செலவினத்தொகை ரூ.500000/– (ஐந்து லட்சம்)–த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண்.** 3014/2017/எச்1 | **தீர்மான எண்:533**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **22)** மயிலாடுதுறை நகராட்சி குடிநீர் திட்ட நிதி வார்டு எண்.**36** பகுதிக்கு நீர்வரத்து குறைவாக செல்வதால் அப்பகுதி மக்களுக்கு தண்ணீர் லாரியின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது கோடைகாலம் என்பதால் குடிநீர் தட்டுப்பாடு அதிகமாக வரும் நிலை உள்ள காரணத்தால் வார்டு எண்.**31** வண்டிப்பேட்டையில் உள்ள போர்வெல்லிருந்து 10HP Submersible motor Pumpset அமைத்து குடிநீர் எடுத்து Pipe line மூலம் மாந்தோப்பு தெருவிற்கு செல்லும் குழாயில் இணைத்து குடிநீர் வழங்கிட தேவையான மதிப்பீடு தொகை ரூ.**2.50** இலட்சம் (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஆகும். இதனை நகராட்சியின் குடிநீர் திட்ட நிதி **2018–2019**–லிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.0752/2019/இ1. | **தீர்மான எண்:534**<br>அனுமதிக்கப்பட்டது |
| | **23)** இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் வருகை பதிவேடுகள் மற்றும் இந்நகராட்சி வாகனங்களின் பயன்பாடுகளையும், Online மூலம் கண்காணித்திட நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் அறிவுறுத்தியதன்படி Bio Matric முறையில் பணியாளர்களின் வருகை பதிவேட்டினையும், GPS மூலம் இந்நகராட்சி வாகனங்களின் தினசரி செயல்பாட்டினையும், கண்காணித்திட தேவையான 70 எண்ணிக்கை Sim card- களை General Manager BSNL கும்பகோணம் நிறுவனத்திடம் நேரடியாக கொள்முதல் செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.53900/– (ரூபாய் ஐம்பத்தி மூவாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) ஆகும். Sim card- ஒன்றுக்கான செலவினம் கீழ்கண்டவாறு,<br><br>Sim card- ஒன்றுக்கு வைப்புத்தொகை – ரூ.500/–<br>Sim card- ஒன்றுக்கு மாத கட்டணம் – ரூ. 170/–<br>Sim card- ஒன்றுக்கு இணைப்பு கட்டணம் – ரூ.100/–<br>–––––––<br>கூடுதல் ரூ.770/–<br>––––––––<br><br>மேற்கண்டபடி Sim card- ஒன்றுக்கு ரூ. 770/– வீதம் 70 எண்ணிக்கைக்கு 70 X 770 = Rs. 53900/-னை<br><br>இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து இச்செலவினத்தை மேற்கொள்ளவும் The General Manager BSNL கும்பகோணம் நிறுவனத்திடம் நேரடியாக கொள்முதல் செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: 1. அனுமதிக்கலாம்.<br><br>2. மேற்படி Sim card- களுக்கு மாத கட்டணம் ரூ.170/–ஐ பிரதிமாதமும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலுத்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.1344/2019/சி1. | **தீர்மான எண்:535**<br>அனுமதிக்கப்பட்டது |